**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 513/2021**
**வழக்கு சாட்சி PW–11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துகிருஷ்ணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | இராமையா | தொழில் | : | சார்பு ஆய்வாளர் |
| கிராமம் | : | நாகல்குளம் | வயது | : | 33 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of October 16th, 2025.

**(2ம் எதிரி ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் தற்போது தென்காசி மாவட்ட தனிப்பிரிவில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்பு நான் தென்காசி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது, கடந்த 07.09.2020ம் தேதி, 17.00 மணிக்கு நிலைய பொறுப்பில் இருந்தபோது, விஜயலட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவைப் பெற்று, அதன் தன்மைப்படி காவல் நிலைய குற்றஎண்.312/2020, சட்டப்பிரிவுகள் 448, 392, 397 IPC –ன் படி முதல் தகவல்அறிக்கை பதிவு செய்து, அதன் அசலை தென்காசி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஒரு நகலை குற்றாலம் காவல் நிலைய ஆய்வாளர் பொறுப்பு தென்காசி காவல்நிலைய ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கும் வைத்தேன். நான் பதிவு செய்த

முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

முதல்தகவல்அறிக்கையிலும், புகார்மனுவிலும் எதிரிகளின் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் புகார்தாரரிடம் இருந்து எந்த புகாரும் பெறவில்லை என்றாலும், நான் புகார்தாரரிடம் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொண்டு, இந்த வழக்கிற்கு ஏதுவாக பின்னர் புகார் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

**இல்லை.**

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.10.18 14:12:56 +0530